ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை,
புதுச்சேரி.

## நுரையீரல் சிறப்பு சிகிச்சை துறை

## உலகநுரையீரல் தினம் 2022

வணக்கம்.

நான் மருத்துவர் யுவராஜன் நுரையீரல் சிறப்பு மருத்துவர் ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் செப்டம்பர் 24 அன்று உலகநுரையீரல் தினம் கொண்டாடினோம். கொரோனா தொற்றுக்கு பிறகே நுரையீரல் குறித்த நோய்களைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டது. பொதுவாக பருவநிலை மாறும் போது வீசிங் எனப்படும் ஆஸ்துமா நோய் அதிக அளவில் இருக்கும். இந்நோய் மூச்சுக்குழாயில் ஏற்படும் ஒவ்வாமையினால் வருகிறது. பருவநிலை மற்றும் வெப்பநிலை மாறுதலாலும் ஒருவித வைரஸ்கிருமித் தொற்றாலும் ஏற்கனவே ஒவ்வாமைத் தன்மை உடையவருக்கும் நுரையீரல் அடைப்பு ஏற்படுகிறது இதனால் மூச்சுதினறல் இருமல் ஆகியவை வரும். பலரிடம் இருக்கும் தவறான எண்ணம் இந்நோய்க்கு ஆயுள் முழுவதும் மருந்து எடுக்கவேண்டும் என்பது.

முன்பைவிட இப்பொழுது பல நவீன சிகிச்சை முறைகள் பெருகிவிட்டன. மூச்சுகுழாயில் ஏற்படும் அடைப்பு மற்றும் இருமலைக் கட்டுப்படுத்த இன்ஹேலர் என்ற மருந்து கொடுக்கப்படும். இதை ஆயுள் முழுவதும் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆஸ்துமா யாருக்கு வரும் என்பது பிறப்பிலேயோ, காலமாற்றத்தாலோ, நோய்த் தொற்று ஏற்படும் பொழுதோ அல்லது இரசாயன மாற்றத்தாலோ இது அதிகமாகி மூச்சுத்தினறல் ஏற்படும். இதை சிகிச்சையினால் சரிசெய்ய முடியும். இந்நோய் அதிகரிக்கும் சமயங்களில் மட்டும் சிகிச்சை எடுத்துக்கொள்வது சரியான முறையல்ல.

சிலசமயங்களில் இத்தொந்தரவு அடிக்கடி வந்தால் நுரையீரல் சுருங்கிவிடும் தன்மை கொண்டு நாள்பட்ட நுரையீரல் அடைப்பாகிவிடும். இதற்கு நுரையீரலுக்கே கொடுக்கப்படும் மருந்துகளே சிறந்தவை.

சிகிச்சைக்கு கொடுக்கும் மாத்திரைகள் குடலுக்கு சென்று பின் கல்லீரலுக்கு சென்று அதன்பின் இரத்த ஓட்டத்தில் நுரையீரலை வந்தடையும். இதனால் நுரையீரலில் மாத்திரையின் வீரியம் குறைவாக இருக்கும் மற்றும் நீண்ட நாட்களுக்கு மருந்து எடுத்துக் கொள்வதால் நுரையீரலுக்கே கொடுக்கப்படும் மருந்துகளே சிறந்தவை. இவை அடைப்புத்தன்மை, நுரையீரல் சதை வீக்கம், சளிசேரும் தன்மைகளை குறைத்து சளி வெளியேற்றத்தை அதிகரிக்கும். மருத்துவர் ஆலோசனைப்படி அவர் கூறும்வரை இந்த மருந்தை எடுப்பது அவசியப்படுகிறது. ஆஸ்துமாவில் நிறைய ரகங்கள் உள்ளன. 2-3 நாட்களில் சரியாகிவிட்டது என்று மருந்தை நிறுத்துதல் கூடாது. இப்பொழுது உலக அளவில் இன்ஹேலர்களே ஆஸ்துமாவிற்கு கொடுக்கப்படுவது பல ஆராய்சிகளில் நிருபிக்கப்பட்டுள்ளது. இது நுரையீரலுக்கு எந்தவித பாதிப்பையோ பக்கவிளைவுகளையோ ஏற்படுத்தாது.

ஆஸ்துமாவிற்கு உணவு கட்டுப்பாடு மிகவும் குறைந்த அளவேயாகும். (எ.கா) அதிக எண்ணெய் உள்ள உணவுகள், உப்பு அதிகம் உள்ளவை (ஊறுகாய், கருவாடு) பழைய உணவுப்பொருட்கள் அசுத்தமான பொருட்கள் இவற்றை தவிர்த்தல் போதுமானது. மருத்துவரின் ஆலோசனைப்படி எந்தவித பயமின்றி மருந்து எடுத்துக்கொள்ள ஆஸ்துமா கட்டுக்குள் இருக்கும். இதுபோன்ற நுரையீரல் நோய்கள் உலகில் பல உள்ளன. அதைப்பற்றி பின்வரும் காலங்களில் கண்டிப்பாக பார்ப்போம். வாய்ப்பு கொடுத்த நமது மருத்துவக் கல்லூரிக்கு மனமார்ந்த நன்றிகள்.